**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.153 /மா/2022**
**நாள் : 15 .11.2022**

திரு. பா. முருகேசன்,
திருச்சிராப்பள்ளி. – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
ஸ்ரீரங்கம் கோட்டம்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
திருச்சிராப்பள்ளி – எதிர்மனுதாரர்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், கே.கே.நகர், ஒலையூர் கிராமம், வடக்கு தெரு எண்.4/168–ல் வசிக்கும் திரு. பா. முருகேசன் என்பவரின் 23.08.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 24.08.2022-ல் பெறப்பட்டு 153மா/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், கே.கே.நகர், ஒலையூர் கிராமம், வடக்கு தெரு எண்.4/168–ல் வசிக்கும் திரு. பா.முருகேசன் என்பவர் தனது முறையீட்டு மனுவில், கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:

" திருச்சி மாநகராட்சி, ஸ்ரீரங்கம் கோட்ட அலுவலக கோப்பு எண்.எப்1/க.அ.எண்.96/10 (ஸ்ரீ) மற்றும் எப்1/7520/2007 ஸ்ரீ(மை) நாள் 30.03.2010 ன்படி திருச்சி தெப்பக்குளம் பகுதியில் இயங்கி வரும் ஹோலிகிராஸ் பெண்கள் கல்லூரிக்கு கட்டிடம் கட்ட கட்டட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட ஹோலிகிராஸ் பெண்கள் கல்லூரிக்கு கட்டடம் கட்ட வழங்கப்பட்ட கட்டட அனுமதியில் ஸ்ரீரங்கம் கோட்ட உதவி ஆணையர் அவர்கள் பல்வேறு முறைகேட்டில் ஈடுபட்டுள்ளார்.அது குறித்த விவரம் கீழ்கண்டவாறு:

i) மேற்கண்ட கல்லூரிக்கு கட்டடம் கட்ட வழங்கப்பட்ட கட்டட அனுமதிக்கு வழங்கப்பட்ட வரைபடத்திற்கு மாறுதலாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட பரப்பளவுக்கான அளவுகளை விட கூடுதலாகவும் கட்டடம் கட்டி உள்ளனர்.

ii) மேற்கண்ட கல்லூரிக்கு கட்டடம் கட்ட வழங்கப்பட்ட கட்டட அனுமதியில் குறிப்பிடப்பட்டுள்ள 12 நிபந்தனைகளில் 9 நிபந்தனை மட்டும் செயல்படுத்தி விதிமீறலில் ஈடுபட்டுள்ளனர்.

iii) மேற்கண்ட கல்லூரிக்கு வழங்கப்பட்ட கட்டட அனுமதியின்படி கட்டட பணி நடைபெற்று வந்தபோது ஸ்ரீரங்கம் மாநகராட்சி அதிகாரிகளால் கடந்த 02.09.2010, 02.01.2012, மற்றும் 28.01.2012 ஆகிய தினங்களில் ஆய்வு செய்யப்பட்டது. மேற்கண்ட ஆய்வின்போது விதிமீறல்கள் குறித்து குறிப்பெடுத்து அதிகாரிகள் அது தொடர்பாக எந்தவிதமான சட்ட மேல் நடவடிக்கை ஏதும் எடுக்காமல் இருந்து வருகின்றனர்.

iv) மேற்கண்ட கட்டட அனுமதியில் குறிப்பிட்டுள்ள படி நகர சர்வே வார்டு N, பிளாக் 35, டவுன் சர்வே எண் 22 மற்றும் 23ல் அமைந்துள்ள கட்டடத்திற்கு உரிய பதிவுதுறை அல்லது வருவாய்துறை ஆவணம் ஏதும் இணைக்காமல் கட்டடம் அனுமதி வழங்கி உள்ளனர். மேலும் மேற்கண்ட சர்வே எண்ணிற்க்கான ஆவணத்தை ஏதும் இணைக்காமல் கட்டடம் அமைந்துள்ள இடத்தை சுற்றியுள்ள இடத்திற்கான ஆவணத்தை இணைத்து கட்டட அனுமதி வழங்கி உள்ளனர். மேற்கண்ட நகர சர்வே வார்டு N, பிளாக் 35, டவுன் சர்வே எண் 22 மற்றும் 23க்கான ஆவணங்கள் அனைத்தும் மூன்றாம் நபரின் பெயரில் உள்ள நிலையில் சட்டத்திற்கு புறம்பாக ஹோலிகிராஸ் கல்லூரிக்கு கட்டட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

v) தமிழ்நாடு நகராட்சிகள் கட்டட விதிகள் 1972ன் விதி 7ல் குறிப்பிட்டுள்ளபடி நீர்நிலையை ஒட்டி 15 மீட்டர் தொலைவுக்கு எந்தவிதமான கட்டட அனுமதி வழங்கக்கூடாது என்ற விதி இருந்தும் மேற்கண்ட கட்டட அனுமதியில் நகர சர்வே வார்டு N, பிளாக் 35 டவுன் சர்வே எண் 4ல் அமைந்துள்ள வாய்க்காலுக்கும் மற்றும் கட்டடத்தின் ஒட்டியே வாய்க்கால் செல்கின்றது.

எனவே இம்மனு மூலம் திருச்சி மாநகராட்சி கட்டட அனுமதி உத்தரவில் உள்ள நிபந்தனைகளை மீறியும், உரிய சட்ட விதிமுறைகளை மீறியும், மற்றும் அனுமதிக்கப்பட்ட அளவுகளை விட கூடுதலாகக்கட்டி முடிக்கப்பட்ட கட்டடம் குறித்து விசாரணை செய்தும் மற்றும் முறைகேட்டில் ஈடுபட்ட ஸ்ரீரங்கம் உதவி ஆணையர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்பக்கோரி உதவி ஆணையர், ஸ்ரீரங்கம் கோட்டம், திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு இம்முறைமன்ற நடுவ 23.09.2022 நாளிட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டது.

3) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவ 07.10.2022 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் 18.10.2022 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைக்கப்பட்டனர்.

4) மனுதாரர் 18.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

" திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சத்திரம் பஸ்நிலையத்தில் அமைந்துள்ள ஹோலிகிராஸ் கல்லூரி தொடர்பான வாக்குமூலமாக என்னால் சமர்ப்பிக்கப்படும் எனது 18.10.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களை வாக்குமூலமாகவும் மேலும் என்னால் இம்முறைமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள எனது 23.08.2022 நாளிட்ட புகார் மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாகவும் பதிவு செய்து கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார். மனுதாரர் தனது 18.10.2022 நாளிட்ட கடிதத்தில் 23.8.2022 நாளிட்ட கடிதத்தில் குறிப்பிட்டதையே குறிப்பிட்டு தெரிவித்துள்ளார்.

மேலும் மேற்கண்ட கட்டடம் அனுமதி வழங்கப்பட்ட உத்தரவுக்கான கோப்பில் திருச்சி மாநகராட்சி சார்பில் 05.12.1996 தேதியன்று வழங்கிய SLR நகலில் (CA/C10/1052/1996) பட்டாதாரர் பெயர் "Holy Cross College High School" என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் திருச்சி மாநகராட்சி அரியமங்கலம் கோட்ட அலுவலகத்தில் பராமரிக்கப்படும் நகர நில பதிவேட்டில் வார்டு N. பிளாக் 35, டி.எஸ்.நம்பர் 22 & 23 க்கான இடத்தின் பட்டாதாரர் பெயர்கள் முகமதுஷா பீபீ மற்றும் அமிர்தம்மாள் என பதிவாகி உள்ளது. மேலும் கட்டடம் அனுமதிக்காக கல்லூரி நிர்வாகம் தாக்கல் செய்த SLR நகல் போலியானவை என இதன் மூலம் தெரியவருகிறது.

மேற்கண்ட கல்லூரி அனுமதி பெற்ற நான்கு ஆண்டுகள் பின் தான் கல்லூரி நிர்வாகம் திருச்சி மாநகராட்சி, அரியமங்கலம் கோட்டம், நில அளவை பிரிவில் உள்ள நடப்பு கைப்பிரதி SLR பதிவேட்டில் வார்டு N பிளாக் 35, டிஎஸ் நம்பர் 22 & 23க்கான பாகம் எண்.16ல் கண்டுள்ள முனிசிபல் ரிஜிஸ்டரில் மேற்கண்ட சர்வே எண்ணிற்கான Mother Superior Holy Cross College, Trichy என்ற பெயரினை முறையான உத்தரவு ஏதும் இல்லாமல் முறைகேடான வழியில் பதிவேற்றம் செய்து உள்ளனர். கைப்பிரதி SLR பதிவேட்டில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள பாகத்தில் உள்ள எழுத்திற்கும் மற்ற பாகத்தில் உள்ள எழுத்திற்கும் வேறுபாடு உள்ளது.

மேற்கண்ட சர்வே எண்ணிற்கான வார்டு N. பிளாக் 35, டிஎஸ் நம்பர் 22 &23க்கான திருச்சி மாநகராட்சி, அரியமங்கலம் கோட்டம், நில அளவை பிரிவில் உள்ள நடப்பு SLR பதிவேட்டில் பாகம் எண்.19யில் கண்டுள்ள Remarks (ஷரா)யில் கல்லூரி மைதானம் ஹோலி கிராஸ் அனுபவத்தில் உள்ளது. முனிசிபல் பதிவு எவ்வித பதிவு குறிப்பிடப்படவில்லை. விபரம் இல்லை. முனிசிபல் பதிவு இல்லை என 2006ஆம் ஆண்டு டவுன் ரீ சர்வேயில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொல்லியல் துறையின் கீழ் உள்ள புராதன சின்னமாக விளங்கும் திருச்சி மலைக்கோட்டையில் கதவு முதன்மை அரண் கதவு (Main Guard Gate) சுற்றி 300 மீட்டர்

தொலையில் அமைந்துள்ள மேற்கண்ட கல்லூரிக்கு கட்டடம் கட்ட வழங்கப்பட்ட கட்டட அனுமதியில் மத்திய அரசின் கெடுபிடியை மீறியும், ஸ்ரீரங்கம் கோட்ட மாநகராட்சியின் அலுவலர்கள் துணையுடன் தரைதளம் மற்றும் முதல் தளம் கட்ட மட்டுமே வெறும் கண் துடைப்பிற்காக மாநகராட்சியிடம் கட்டடம் கட்ட அனுமதி பெற்று கொண்டு அதற்கு மாறாக மூன்று மற்றும் நான்கு தளம் வரை விதிமுறைகளை மீறி பாதுகாக்கப்பட்ட புராதான சின்னத்தை மறைக்கும் வகையில் கட்டடம் கட்டி உள்ளனர் என தெரிவித்துள்ளார்.

மேலும் ஹோலி கிராஸ் கல்லூரி கட்டட அனுமதிக்கு வழங்கப்பட்ட ஆவணங்களை ஆராயாமல் கண்ணை மூடி கட்டட அனுமதி வழங்கியுள்ளனர். இக்கல்லூரி கட்டடம் கட்ட கொடுக்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்யாமல் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இது அலுவலர்களுக்கு தெரிந்தும் நடவடிக்கை எடுக்காமல் காலம் தாழ்த்தி வருகிறார்கள். தொல்லியல் துறையின் வழிகாட்டுதல்களை மீறி கடைபிடிக்காமல் கட்டடம் கட்டப்பட்டது தொடர்பாக மாநகராட்சி அதிகாரிகள் கவனத்தில் எடுத்துக்கொள்ளாமல் இருக்கிறார்கள். கட்டட அளவு மற்றும் நிபந்தனைகளை மீறியது தொடர்பாக ஆய்வு செய்தபின் தெரியவந்தும் அதிகாரிகள் மேல்நடவடிக்கை எடுக்காமல் விட்டுள்ளனர் என தெரிவித்துள்ளார்.

5) 18.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் மண்டலம்–1 ஸ்ரீரங்கத்தின் உதவி ஆணையர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

“ திருச்சிராப்பள்ளி தெப்பக்குளம் பகுதியில் இயங்கி வரும் ஹோலிகிராஸ் பெண்கள் கல்லூரிக்கு கட்டடம் கட்ட பெறப்பட்ட அனுமதிக்கு மாறாக கூடுதலாக கட்டப்பட்ட கட்டடத்திற்கு 1994ம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் 282(1&2) பிரிவின் கீழ் அறிவிப்பு 20.01.2022 அன்று வழங்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் என்னால் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனது 14.10.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

6) திருச்சிராப்பள்ளி, ஸ்ரீரங்கம் உதவி ஆணையர் தனது 14.10.2022 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

“ ஹோலிகிராஸ் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளியின் கட்டட அனுமதி கோரும் விண்ணப்பம் 13.11.2007ல் பெறப்பட்டு மனுதாரரின் விண்ணப்பம், வரைபடங்கள், பத்திரம் மற்றும் இதர ஆவணங்கள் இவ்வலுவலக கடிதம் வாயிலாக 19.12.2007 அன்று உறுப்பினர், செயலர், உள்ளூர் திட்டக்குழுமம் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. நகர ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் 04.02.2010 நாளிட்ட உத்தரவின்படி ஹோலிகிராஸ் பெண்கள் கல்லூரிக்கு நகரளவு எண்கள். 2,4,5,5,7/1, 2, 8/1, 2, 18,19, 22,23,29,30,31,32,33/1,2, 41,46, 47, 48 & 49 வார்டு எண்.N . பிளாக் எண்.35 என்ற இடத்தில் 73190.10 சதுர மீட்டர் பரப்பு கொண்ட மனையில்

கீழ்க்கண்ட அளவுகளின்படி கட்டட அனுமதி நிபந்தனைகளின் அடிப்படையில் வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

<u>பள்ளிக்கட்டிடம்.</u>

| | | |
|---|---|---|
| தரைத்தளம் | 308.0 சதுரமீட்டர் பரப்பில் | 4 வகுப்பறைகள் |
| முதல் தளம் | 308.0 சதுரமீட்டர் பரப்பில் | 4 வகுப்பறைகள் |
| 2–ம் தளம் | 308.0 சதுரமீட்டர் பரப்பில் | 4 வகுப்பறைகள் |
| | **மொத்தம்** | **12 வகுப்பறைகள்** |

<u>கல்லூரிக்கட்டிடம்</u>

| | | |
|---|---|---|
| தரைத்தளம் | 975.23 சதுர மீட்டர் பரப்பில் | 7 வகுப்பறைகள் |
| முதல் தளம் | 975.23 சதுர மீட்டர் பரப்பில் | செவிலியர் ஹால், நூலகம், அலுவலக அறை, கணிப்பொறி அறை, அறிவியல் ஆராய்ச்சி அறைகள் |

இதன் அடிப்படையில் உறுப்பினர் செயலர், திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களின் அலுவலக நடவடிக்கையின்படி மேற்கூறிய பள்ளிக்கட்டிடம் மற்றும் கல்லூரி கட்டடத்திற்கு நிபந்தனை அடிப்படையில் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்கள் உத்தரவின் அடிப்படையிலேயே உள்ளூர் திட்டக்குழும அலுவலகத்தால் திட்ட அனுமதி 05.03.2010 முதல் 04.03.2013 வரையிலான காலத்திற்கு திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையர் அவர்களின் ஒப்புதல் வழங்கியதின்பேரில் மற்றும் மேற்கூறிய நகர் ஊரமைப்பு இயக்குநர் அலுவலகம், சென்னை, உறுப்பினர் செயலர், திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டக்குழுமம் ஆகியோர்களின் உத்தரவின் அடிப்படையில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையர் ஆணையின் படி கட்டட அனுமதி 30.03.2010 முதல் 04.03.2013 வரையிலான காலத்திற்கு கட்டட அனுமதி வழங்கப்பட்டது.

ஹோலிகிராஸ் கல்லூரி நிர்வாகமானது கட்டட அனுமதிக்கு மாறுதலாக கட்டப்பட்ட கட்டடத்திற்கு 1994-ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் 282 (1 & 2) பிரிவின் கீழ் அறிவிப்பு 20.1.2012 அன்று வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது. மேலும் மேற்கண்ட கல்வியியல் கல்லூரி கட்டடம், நகரளவை எண்கள்.22 மற்றும் 23 வார்டு எண்.N பிளாக் எண்.35ல் அமையப்பெற்றுள்ளது. தற்போது பதிவிறக்கம் செய்யப்பட்ட சர்வே வரைபட அடங்கலில் பிளாக் எண்.35, நகரளவு எண்கள் 22 மற்றும் 23 ஹோலிகிராஸ் கல்வியியல் கல்லூரி என பதிவு உள்ளது என தெரிவித்துக்கொள்கிறேன்.

மனுதாரர் கூறியுள்ள நகர சர்வே வார்டு N. பிளாக் 35, டவுன்சர்வே எண்.4ல் அமைந்துள்ள வாய்க்கால் ஹோலிகிராஸ் கல்லூரி வளாகத்தின் மைய பகுதியின் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி கல்லூரி வளாக சுற்றுச்சுவர் பழைய குட்ஷெட் ரோடு அருகே உள்ளது என புலப்படத்தில் மட்டுமே

உள்ளது. பூமியில் சாக்கடை ஏதுமில்லை. மேற்கண்ட நகரளவு எண்.4க்கும் மனுதாரர் புகாரில் தெரிவிக்கப்பட்ட கட்டிட அனுமதிக்காக வழங்கப்பட்ட உத்தேச வரைபடத்தின்படி ஹோலிகிராஸ் கல்வியியல் கட்டிடம் வெகு தொலைவில் உள்ளது எனவும், ஹோலிகிராஸ் கல்லூரி வளாகத்தின் வடக்கு பகுதியில் கோட்டை ஸ்டேசன் ரோடு அருகே அமையப்பெற்றுள்ளது" என தெரிவித்துள்ளார்.

7) முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம், திருச்சிராப்பள்ளி ஸ்ரீரங்கம் உதவி ஆணையரின் வாக்குமூலம் மற்றும் அறிக்கை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டுள்ளன:

மனுதாரர் திருச்சிராப்பள்ளி ஹோலிகிராஸ் பெண்கள் கல்லூரிக்கு கட்டடம் கட்ட அனுமதி வழங்கியதில் ஸ்ரீரங்கம் கோட்ட உதவி ஆணையர் அவர்கள் பல்வேறு முறைகேட்டில் ஈடுபட்டுள்ளார் எனவும் அந்த கட்டட அனுமதிக்கான உத்தரவில் உள்ள 12 நிபந்தனைகளில் 9 நிபந்தனை மட்டும் செயல்படுத்தி சட்ட விதிமுறைகளை மீறியுள்ளனர் என புகார் தெரிவித்துள்ளார்.

ஹோலிகிராஸ் கல்லூரி நிர்வாகமானது கட்டட அனுமதிக்கு மாறுதலாக கட்டப்பட்ட கட்டடத்திற்கு 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் 282 ( 1 & 2) பிரிவின் கீழ் அறிவிப்பு 20.01.2012 அன்று வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது. மேற்கண்ட கல்வியியல் கல்லூரி கட்டடம், நகரளவு எண்கள்.22 மற்றும் 23 வார்டு எண்.N பிளாக் எண்.35ல் அமையப்பெற்றுள்ளது. தற்போது பதிவிறக்கம் செய்யப்பட்ட சர்வே வரைபட அடங்கலில் பிளாக் எண்.35, நகரளவு எண்கள் 22 மற்றும் 23 ஹோலிகிராஸ் கல்வியியல் கல்லூரி என பதிவு உள்ளது. மனுதாரர் கூறியுள்ள நகர சர்வே வார்டு N. பிளாக் 35, டவுன் சர்வே எண்.4ல் அமைந்துள்ள வாய்க்கால் ஹோலிகிராஸ் கல்லூரி வளாகத்தின் மைய பகுதியின் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி கல்லூரி வளாக சுற்றுச்சுவர் பழைய குட்ஷெட் ரோடு அருகே உள்ளது என புலப்படத்தில் மட்டுமே உள்ளது. பூமியில் சாக்கடை ஏதுமில்லை. மேற்கண்ட நகரளவு எண்.4க்கும் மனுதாரர் புகாரில் தெரிவிக்கப்பட்ட கட்டட அனுமதிக்காக வழங்கப்பட்ட உத்தேச வரைபடத்தின்படி ஹோலிகிராஸ் கல்வியியல் கட்டடம் வெகு தொலைவில் உள்ளது எனவும், ஹோலிகிராஸ் கல்லூரி வளாகத்தின் வடக்கு பகுதியில் கோட்டை ஸ்டேசன் ரோடு அருகே அமையப்பெற்றுள்ளது என ஸ்ரீரங்கம் உதவி ஆணையர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் திருச்சிராப்பள்ளி ஹோலிகிராஸ் பெண்கள் கல்லூரி கட்டடம் கட்டியதில் ஏதாவது விதிமீறல்கள் உள்ளனவா என்பதை கண்டறிய செயற்பொறியாளர் தலைமையில் ஒரு குழு அமைத்து மேற்கண்ட கல்லூரிக்கு சென்று ஆய்வு செய்து அறிக்கையை மாநகராட்சிக்கு சமர்ப்பிக்கவும் மேலும் அந்த அறிக்கையின் அடிப்படையில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டியிருப்பின் சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்கவும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

The Commissioner, Trichirapalli Corporation is directed to constitute a committee of Engineers and Planners to verify the plans approved for construction of buildings by the Holy Cross College and inspect the structures with reference to the same. Violations and discrepancies, if noticed during the physical inspection, appropriate

action as per rules and regulations of the Town and Country Planning Act and Corporation Act may be initiated against the College authorities by the Trichirapalli Corporation Commissioner.

2022-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 15 -ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. 1. திரு. பா.முருகேசன்
4/168, வடக்கு தெரு,ஒலையூர் கிராமம்,
கே.கே.நகர் (அஞ்சல்) திருச்சிராப்பள்ளி – 620 021.
2. ஆணையர்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
திருச்சிராப்பள்ளி.
3. துணை ஆணையர்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
திருச்சிராப்பள்ளி. (He is instructed to ensure implementation of this order)
4. உதவி ஆணையர்,
ஸ்ரீரங்கம் கோட்டம், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
திருச்சிராப்பள்ளி.
5. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.
6. இணை இயக்குநர், ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032

18/11/22

செயலாளர்

18.11.2022